MAY 2024 **P/ID 35312/PTL1B**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. வைணவ திவ்ய தேசங்கள் எத்தனை?

2. சூடிக்கொடுத்த சுடர்கொடி – பெயர்க் காரணம் கூறுக.

3. ஆண்டாளின் இயற்பெயர் யாது?

4. பாவை நோன்பு எந்த மாதத்தில் நோற்கப்படுகிறது?

5. நாச்சியார் திருமொழியில் எத்தனைப் பாசுரங்கள் உள்ளன?

6. குலசேகரர் எந்த நாட்டினர்?

7. திருச்சித்திரக்கூடம் எங்குள்ளது?

8. மணிவாசகர் வகித்த அரசுப் பதவி யாது?

9. 'பாசவேர்' – யாவை?

10. தேவாரம் – சொற்பொருள் கூறுக.

11. சம்பந்தர் பிறந்த ஊர் எது?

12. காரைக்காலம்மையின் பெற்றோர் யாவர்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. 'மானிடர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்' – விளக்குக.

14. 'என்னை விதிக்கிற்றியே' என்று ஆண்டாள் வேண்டுவது யாது?

15. வேங்கடத்தின் படியாகக் கிடக்கக் குலசேகரர் விழைந்ததேன்?

16. சிவபெருமானின் பெருமைகளாக மாணிக்கவாசகர் கூறுவன யாவை?

17. 'ஆண்டவனை வழிபட்டால் ஆணவம் நீங்கும்' – கருத்துரைக்க.

18. தேவாரத்தில் உள்ள தொன்மக் கூறு ஒன்றின் தத்துவத்தை விளக்குக.

19. சிவனின் உருவ அமைப்பைக் காரைக்காலம்மை புனையுமாற்றை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே
500 சொற்களில் விடையெழுதுக.

20. ஆண்டாளின் தெய்வப் புலமையை எடுத்துரைக்க.

21. குயிலுக்கு ஆண்டாள் இட்ட கட்டளைகள் யாவை?

22. குலசேகரரின் பக்தி மேம்பாட்டை எடுத்துரைக்க.

23. திருவாசகத்தின் பக்திப் பெருக்கை வெளிப்படுத்துக.

24. திருத்தோனியப்பர் அருட்பெருமைகளைப் பட்டியலிடுக.

———————